பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 13 | வெள்ளிக்கிழமை | 25.04.2025 | அதிர்வு 264

## உள்ளூராட்சித் தேர்தலையொட்டி

# மே மாதம் 5, 6 ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு விடுமுறை




வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள 06

# பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு வத்திக்கான் தூதரகத்தில் ஜனாதிபதி இரங்கல்



பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று பிற்பகல் வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்றார்.

அங்கு சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பிரையன் உதைக்வே ஆண்டகை வரவேற்றார்.

பின்னர், பேராயருடன் சிறிது நேரம் உரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் குறிப்பொன்றைப் பதிந்தார்.

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்’க்காக உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவ 06




## யாழ். மாநகர சபையில்

# தமிழரசை ஆதரிக்க மணி அணி யோசனை

## விக்கியைச் சமரசம் செய்யப் பெரும் பாடு

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட யாழ். மாவட்டத்தில் தாம் போட்டியிடாத சபைகளில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவளிப்பது குறித்த தமிழ் மக்கள் கூட்டணி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என்று தமிழ் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 06




தலைமன்னாரில் இருந்து நடுக் கடலில் இராமர் பாலத்தின் ஆறாவது திட்டு வரை சுற்றுலாப் பயணிகளுக்கு படகில் உல்லாசப் பயண சேவையை வழங்கும் திட்டத்தை மே மாதம் ஆரம்பிப்பது சாத்தியமற்றது என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தலைமன்னாரில் இருந்து இராமர் பாலம் அமைந்துள்ள இடங்கள் எனச் சுட்டிக் காட்டப்படும் தீடைகளிற்கு சுற்றுலாப் பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமர திசநாயக்க தேர்தல் பரப்புரை மேடையில் கூறியமையோடு மாவட்ட அரச அதிபரும் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் படகுகளிற்கான ஆழ் அனுமதிப் பத்திரம் எனப்படும் பயணிகள் போக்குவரத்திற்கான அனுமதியை வணிகக் கப்பல. பெறுவதற்கு செயலக அனுமதி, காப்புறுதி செயலகத்தில் காப்புறுதி என்பன பெறப்பட வேண்டும்.

இந்த வணிகக் கப்பல் செயலக 06



# மறைந்த புனித பாப்பரசருக்கு பேராயர் நேரில் இறுதி அஞ்சலி

மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் புகழுடலுக்கு நேற்று வியாழக்கிழமை கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அஞ்சலி செலுத்தினார்.

பாப்பரசர் தனது 88ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

பாப்பரசரின் புகழுடல் பொது மக்கள் அஞ்சலிக்காக அரச மரியாதையுடன் வத்திக்கானிலுள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை பாப்பரசரின் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, பாப்பரசரின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் தினமான நாளை 26ஆம் திகதியை இலங்கையில் தேசிய துக்க தினமாக அரசு அறிவித்துள்ளது.

எனவே, நாளை சனிக்கிழமை சகல அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறும் அரசால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.















# புதிய சட்டங்களை வகுத்தாவது இனவாதத்தைத் தோற்கடிப்போம்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

புதிய சட்டங்களை வகுத்தேனும் நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிங்கள மக்கள் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு வாக்களித்துள்ளனர். முஸ்லிம் மக்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்துள்ளனர்.

பிளவுபட்டிருந்தநாட்டையும்,நாட்டுமக்களையும் நாம் ஒன்றிணைத்துள்ளோம்.

கடந்த காலங்களில் ஆட்சியமைத்தவர்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக இனவாதத்தைப் பரப்பினார்கள். சிங்கள முஸ்லிம் பிரச்சினையை ஏற்படுத்தினார்கள்.

இனவாத அமைப்புகளை வலுப்படுத்தினார்கள். அளுத்கமையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. திகனையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. தற்போது இவ்வாறான செய்திகளுக்கு இடமில்லை.

எமது நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஒருபோதும் இனவாதத்திற்கு இடமளிக்கப்போவதில்லை எனும் உறுதிமொழியை வழங்குகின்றோம்.

இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் போதுமானதாக இல்லாத நிலையில், புதிதாகச் சட்டத்தினை வகுத்தேனும் இனவாதத்தைத் தோற்கடிப்போம்.

அத்துடன்,வெளிநாடுகளினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிப்பதற்குக் குறித்த நாடுகள் இணங்கியுள்ளன.

நாட்டின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் நாட்டின் பொருளாதாரத்தை முன்கொண்டு செல்ல வேண்டும்.

அதற்கு பலமானதொரு அரசாங்க சேவை அவசியம். அதனைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.” என்றார்.







# நாடு முழுவதும் 500 உள்நாட்டு திரவப்பால் விற்பனை நிலையங்களை நிறுவ தீர்மானம்

நாடளாவிய ரீதியில் 500 உள்நாட்டு திரவப்பால் விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கு மில்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.


500 தொழில்முனைவோரின் பங்கேற்புடன் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என மில்கோ நிறுவனத்தின் தலைவர் ஜி.வி.எச். கோட்டாபய தெரிவித்துள்ளார்.

பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து இந்த திட்டத்தை மேம்படுத்தவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

உ
சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக்
கலைப்பீடப் பழையமாணவர் சங்கம்
பெருமையுடன் முன்னெடுக்கும்
பொற்கலைச் சங்கமம்.

வேரிலிருந்து விழுதுவரை




- "பொற்கலை" மலர் வெளியீடு
- ஓய்வுநிலை விரிவுரையாளர்கள், கல்விசார், கல்விசாராப் பணியாளர்களுக்கான மதிப்பளிப்பு
- கலாசார நிகழ்வுகள்
- குருதிக்கொடை
- விளையாட்டு நிகழ்வுகள்
- உண்டாடுதல்

இடம் : கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
காலம்: 26, 27, 28. 04. 2025 ( சனி, ஞாயிறு, திங்கள்)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்
கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்




# இலங்கை மீண்டும் வறுமை நிலைக்கு தள்ளப்படலாம்: உலக வங்கி எச்சரிக்கை

இலங்கையின் பொருளாதாரம் ஒரு நிலையான தன்மையை எட்டியுள்ளதெனக் கருதப்பட்டாலும், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் மீண்டும் வறுமைக்குள் சிக்கிக் கொள்ளும் அபாயம் உருவாகியுள்ளதாக உலக வங்கி எச்சரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டிற்குரிய இலங்கைக்கான அபிவிருத்தி அறிக்கையை வெளியிடும் போதே உலக வங்கி இந்த தகவலைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளைக் காட்டி வருகிறது என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நாட்டில் வறுமையின் அபாயம் மீண்டும் அதிகரித்து வருவதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதாரம் ஒரு நிலையான தன்மையைப் பெற்றிருந்தாலும், நாட்டில் வறுமை அல்லது வறுமைக்கோட்டிற்குள்ளாகும் நிலை அதிகரித்துள்ளதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.




# 10 வருடங்களின் பின்னர் கிடைத்த மரணதண்டனை

பெண்ணொருவரை கொலை செய்து பயணப்பையில் வைத்து கொழும்பு பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள பஸ் நிலையத்தில் விட்டுச்சென்ற சம்பவத்தின் குற்றவாளிக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீண்ட வழக்கு விசாரணைகளுக்கு பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே இந்த தீர்ப்பை அறிவித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கொழும்பு செட்டியார் தெரு பகுதியில் அமைந்துள்ள விடுதியொன்றில் பெண்ணொருவரை கொலை செய்து, பயணப்பையில் வைத்து பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள பஸ் நிலையத்தில் விட்டுச்சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக சட்ட மாஅதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## பரிசுத்த பாப்பரசர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்கும் இலங்கை அரசிதும் மக்களினதும் இரங்கலையும் ஜனாதிபதி தெரி வித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதியை பெறுவதற்காக ஒரு படகிற்கு குறைந்த பட்சம் 300 டொலர் செலுத்தப்பட வேண்டும்.

இதேபோன்று பயணிகள் பாதுகாப்புக் கருதி கப்பல் போக்குவரத்திற்கு உகந்தது எனத் தரச் சான்றிதழ் பெறப்பட்டாலும் படகுகள் முழுமையாகக் காப்புறுதி செய்யப்பட வேண்டும். அதற்கும் ஒவ்வொரு படகிற்கும் பல லட்சம் ரூபா செலவு ஏற்படும். இவற்றில் எவையுமே இதுவரை செய்யப்படவில்லை.

இவ்வாறான சூழலில் எதிர் வரும் 15 ஆம் திகதி பயணிகள் சுற்றுலாப் படகு சேவை இடம்பெறும் என்பது ஆளும் கட்சியின் தேர்தல் பரப்புரையாக மட்டுமே அமையும்.

படகு சேவை ஆரம்பிப்பதானால் சகல அனுமதிகள், பரிசோதனைகளை முறையாக மேற்கொண்டு பாதுகாப்பை உறுதி செய்து ஆரம்பிக்க வேண்டும். மாறாக கட்சியின் தேர்தல் வெற்றிக்காக மக்களின் உயிரைப் பணயம் வைத்து தேர்தல் நோக்கில் செயல்படக் கூடாது. அவ்வாறு செயல்பட்டால் ஏற்படும் பாதிப்புக்கள் அனைத்திற்கும் அநுர அரசே பொறுப்பேற்க வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டிய வழக்கோடு தொடர்புடைய ஒரு விவகாரம் இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றுக்கு வருகின்றது.

இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான சுமந்திரனுக்குக் கடுப்பேற்றும் விதத்தில் 'புதிய சுதந்திரன்' என்ற இலத்திரனியல் பத்திரிகையில் செய்தி வெளியிட்ட அதன் வெளியீட்டாளரான அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிராக சுமந்திரன் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கே இன்று விசாரணைக்காக திருகோணமலை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது. வழக்கின் முடிவு பெரும்பாலும் இன்று தெரியவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மே மாதம் 5, 6ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனைத்து பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுமுறை வழங்கப்பட்ட அனைத்து பாடசாலைகளும் வழமை போன்று எதிர்வரும் 7 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை, வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை எதிர்வரும் 4ஆம் திகதி கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளின் விடுமுறைகள் தொடர்பான விவரங்களை அந்தந்தப் பாடசாலைகளுக்குக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## தமிழரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனும் இது தொடர்பில் சில கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"யாழ்ப்பாணம் மாநகர சபையின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால், வி.மணிவண்ணனின் அரசியல் கனவில் பெரும் சறுக்கல் ஏற்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தமிழரசுக் கட்சியுடன் கூட்டு அமைக்க வாய்ப்பாக - தற்போது யாழ். மாநகர சபை உள்ளிட்ட சில சபைகளில் தமிழரசுக் கட்சியை ஆதரிக்க வி.மணிவண்ணன் விரும்புகின்றார்.

இது தொடர்பில் எம்.ஏ.சுமந்திரனுடன் அவர் சில பல பேச்சுக்களை நடத்தியும் விட்டார்.

எனினும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரனை இந்த முடிவுக்குச் சமரசம் செய்யும் பணிகள் தற்போது நடந்து வருகின்றன.

எனினும், சி.வி.விக்னேஸ்வரன் தரப்போ தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்றில் விரும்பிய ஒன்றுக்கு வாக்களிக்க மக்களைக் கோருவதே சரியென நிலைப்பாட்டில் உள்ளது. விக்னேஸ்வரனைச் சமரசம் செய்ய முயன்றால் வி.மணிவண்ணன் தரப்பினர் தமது நிலைப்பாட்டை விரைவில் பகிரங்கப்படுத்துவார்கள்." - என்றுள்ளது.







# ரி 56 ரக துப்பாக்கி யுகம் தற்போது உருவாகியுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

இலங்கையில் தற்போது ரி 56 ரக துப்பாக்கி யுகம் ஒன்று உருவாகியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மத்துகம பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டு மக்கள் பீதியுடனேயே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வீடுவீடாக புகுந்தும், வீதிகளிலும் கொலைகள் இடம்பெறுகின்றன. துப்பாக்கிகள் நாட்டை ஆளுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்தக்கூடிய திராணி தற்போதைய அரசாங்கத்துக்கு இல்லை. ஆனால் ஜேவிபி வெல்லாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி கூறுகிறார். உங்களது நிதி எங்களுக்குத் தேவையில்லை.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பாலான மன்றங்களை ஐக்கிய மக்கள் சக்தி வென்று ஆட்சியமைக்கும்.

அதன்பின்னர் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடி அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான குழுக்களை நியமித்து, கிராம ரீதியாக பாதுகாப்பைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்போம்.” என்றார்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மக்கள் என்ன முட்டாள்களா?

1988 மற்றும் 1989 பயங்கரவாத சகாப்தத்தைக் காணாத இளைஞர்கள் தற்போது நாட்டில் நடைபெற்று வரும் கொலை அலையின் மூலம் அந்தக் காலகட்டத்தைப் பற்றிய புரிதலைப் பெற முடியும் என பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது கொலை அலை அதிகரித்து வருவதாகவும், குழந்தைகள் முன்னிலையில் தந்தையர்களைக் கொல்லும் கலாசாரம் மீண்டும் தோன்றியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதை ராஜபக்ஷக்களில் ஒருவர் - அதுவும் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் - கூறுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

1971இலும், பின்னர் 1988 மற்றும் 89ஆம் ஆண்டுகளிலும் ஜே.வி.பியினர் முன்னெடுத்த புரட்சி முயற்சிகளின் போது இடம்பெற்ற கொடூர, குரூர கொலைக் கலாசாரம் மிக மோசமானது. இப்போது நடைபெறும் கொலைகள் அவற்றுடன் ஒப்பிடும் போது ஜூஜூப்பி. மிகவும் அற்பமானவை.

ஜே.வி.பி. கிளர்ச்சிகளின் போது ஜே.வி.பியினர் புரிந்த கொடூரங்களுக்கு நிகரான கொடூரங்கள் அவற்றை அடக்குவதற்காக அரச பயங்கரவாதத்தினால் முன்னெடுக்கப்பட்டமையும் மறக்கக் கூடியது அல்ல.

அந்த அரச பயங்கரவாதத்துக்கு எதிராக - ஜெனீவாவுக்கு - ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு - முதலில் அந்த விடயங்களை எடுத்துச் சென்றவர் இந்த நாமல் ராஜபக்ஷவின் தந்தையார் மஹிந்த ராஜபக்ஷதான்.

ஜே.வி.பி. கால கிளர்ச்சியை விடுங்கள். இதே மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்காக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் இன்று காஸாவில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் அவிழ்த்துவிட்டிருக்கும் பெரும் கொடூரங்களுக்கு நிகரானது.

அந்த வேளையில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணை நடத்தும்படி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும் சர்வதேசங்களும் வலியுறுத்தி நிற்கையில் அதை நடைமுறைப்படுத்த முதலிலும் முற்றிலும் மறுத்து நின்றவர்கள் இந்த ராஜபக்ஷக்கள் தான்.

அத்தகைய ராஜபக்ஷக்களில் ஒருவர், நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெறும் கொலைகளை நாட்டின் மிக மோசமான கொலைக் கலாச்சாரமாகக் காட்ட முயல்கின்றார்.

இந்த ராஜபக்ஷக்கள் நாட்டை ஆண்ட போது தமிழர் தேசம் மீது புரியப்பட்ட வரலாற்றுக் கொடூரங்களை - சரித்திரம் காணாத மனிதப் பேரவலங்களை அப்படியே மூடி மறைத்து, அடாவடத்தனம் பண்ணிய ராஜபக்ஷக்களில் ஒருவர், இப்போது கொலைக் கலாசாரம் பற்றித் தத்துவம் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகத் தெரிகிறது.

ஓர் இனத்தின் மீது - ஒரு தேசத்தின் மீது - இனவழிப்புக் கொடூரத்தைப் புரிந்த ராஜபக்ஷக்கள் பாதாள உலகக் குழுக்களின் படுகொலைகளை ஆளும் தரப்பு மீது இப்போது சுமத்துவது மக்களை முட்டாளாக்கும் வேலையன்றி வேறில்லை.

## பஹல்காம் தாக்குதல் எதிரொலி:

# பாகிஸ்தான் மக்களுக்கான விசாவை நிறுத்தியது இந்தியா




பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு எடுத்த முடிவுகளின் தொடர்ச்சியாக, பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகளை உடனடியாக நிறுத்தி வைக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு எடுத்த முடிவுகளின் தொடர்ச்சியாக, பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகளை உடனடியாக நிறுத்தி வைக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்தியாவால் பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து செல்லுபடியாகும் விசாக்களும் ஏப்ரல் 27, 2025 முதல் ரத்து செய்யப்படுகின்றன. பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ விசாக்கள் ஏப்ரல் 29, 2025 வரை மட்டுமே செல்லுபடியாகும்.

தற்போது திருத்தப்பட்டபடி, இந்தியாவில் உள்ள அனைத்து பாகிஸ்தானியர்களும் விசா காலாவதியாகும் முன் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும். பாகிஸ்தானுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்க இந்தியர்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள். தற்போது பாகிஸ்தானில் உள்ள இந்தியர்களும் விரைவில் இந்தியா திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதிகளுக்கு நினைத்தும் பார்க்காத தண்டனை கிடைக்கும்: மோடி எச்சரிக்கை



இந்தியா, ஒவ்வொரு பயங்கரவாதியையும், அவர்களின் ஆதரவாளர்களையும் அடையாளம் கண்டு, கண்காணித்து தண்டிக்கும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எச்சரித்துள்ளார்.

இந்தியாவின் மன உறுதி ஒருபோதும் உடைந்து போகாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு, காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் 25 சுற்றுலாப் பயணிகளும், ஒரு காஷ்மீர் வாசியும் கொல்லப்பட்டனர்.

சம்பவம் இடம்பெற்று இரண்டு நாள்களுக்குப் பிறகு பிரதமர் மோடி, பீகாரின் மதுபனியில் இடம்பெற்ற அரச நிகழ்வில் வைத்து இந்தக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்திய அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகளை பயங்கரவாதிகள் கொடூரமாகக் கொன்றதால் முழு நாடும் வேதனையில் இருக்கிறது.

தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுக்கும், அதற்கு சதித்திட்டம் தீட்டியவர்களுக்கும் அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத தண்டனை கிடைக்கும்.

பயங்கரவாத புகலிடத்தில் எஞ்சியிருப்பதை அழிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

140 கோடி பேரின் விருப்பம் பயங்கரவாதத்தின் தலைவர்களது முதுகை உடைக்கும்.” என எச்சரித்துள்ளார்.

## காஷ்மீரின் பயங்கரவாத தாக்குதல்:

# மூன்று சந்தேக நபர்களை பெயரிட்டுள்ள இந்தியா

ஜம்மு, காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலின் பின்னணியிலிருந்த நான்கு சந்தேக நபர்களில், மூன்று பேரை இந்திய பொலிஸ் பெயரிட்டுள்ளது.

அவர்களில் இருவர் பாகிஸ்தானியர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்றாவது நபர் காஷ்மீரைச் சேர்ந்தவர் எனவும், நான்காவது நபர் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட மூவரும் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட பயங்கரவாத குழுவான லஷ்கர் இ தாய்பாவைச் சேர்ந்தவர்கள் என இந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் இந்தத் தாக்குதலில் எந்தப் பங்கையும் தாங்கள் வகிக்கவில்லை என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.





# பாகிஸ்தானில் உள்ள இந்தியர்களை 48 மணிநேரத்தில் வெளியேற உத்தரவு

பாகிஸ்தானில் உள்ள இந்தியர்கள் 48 மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்திய விமானங்களுக்கு பாகிஸ்தானிய வான்பரப்பில் பறக்க தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடனான வர்த்தகத்துக்கும் முழுமையாக பாகிஸ்தான் தடை விதித்துள்ளது .

பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தின் போது இந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் அருகே யுள்ள பைசரன் பள்ளத்தாக்கில், தடை செய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் கடந்த 22 ஆம் திகதி சுற்றுலா பயணிகளைக் குறி வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தி ஈடுபட்ட பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு பாகிஸ்தானில் இருந்து இயங்குகிறது. பஹல்காமில் தாக்குதல் நடத்தியவர்களில் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களும் இருந்ததாக ஜம்மு காஷ்மீர் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த பின்னணியில், பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவை கூட்டத்தில், எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 1960 ஆம் ஆண்டு செய்து கொண்ட சிந்து நதிநீர் பங்கீடு ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படும் என்பது உட்பட 5 முக்கிய முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகள் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் நேற்று தெரிவித்தது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான தேசிய பாதுகாப்புக் குழு கூட்டம் இஸ்லாமாபாத்தில் நேற்று ஆலோசனை நடத்தியது. இதில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது. அவை வருமாறு,

சிந்து நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதற்கான இந்தியாவின் அறிவிப்பை பாகிஸ்தான் கடுமையாக எதிர்க்கிறது. இந்த ஒப்பந்தம் உலக வங்கியால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். மேலும், ஒருதலைப்பட்சமாக நிறுத்தி வைப்பதற்கான எந்த ஏற்பாடும் இதில் இல்லை. சிந்து நதிநீர் பாகிஸ்தானின் தேசிய நலனுக்கு மிகவும் முக்கியமானது, பாகிஸ்தானின் 24 கோடி மக்களுக்கு அது உயிர்நாடி.

சிந்து நதிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்த எத்தகைய விலையையும் பாகிஸ்தான் கொடுக்கும். சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானுக்குச் சொந்தமான நீரின் ஓட்டத்தைத் தடுப்பது அல்லது திசைதிருப்புவது, ஆற்றின் கீழ் பகுதியின் உரிமைகளை அபகரிப்பதாகும். இது ஒரு போர்ச் செயலாகக் கருதப்படும். சிந்து நதிநீர் நிறுத்தப்பட்டால் பாகிஸ்தான் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி பதிலளிக்கும்.

சர்வதேச மரபுகள், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்கள் ஆகியவற்றை மதிக்காத பொறுப்பற்ற ஒரு நாடு இந்தியா. அது பாகிஸ்தானுக்குள் பயங்கரவாதத்தைத் தூண்டுகிறது, படுகொலைகளை நிகழ்த்துகிறது, காஷ்மீர் மீதான சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை பின்பற்ற மறுக்கிறது. இத்தகைய வெளிப்படையான நடத்தையை இந்தியா கைவிடும் வரை, சிம்லா ஒப்பந்தம் உட்பட அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களையும் நிறுத்தி வைக்கும் உரிமையை பாகிஸ்தான் பயன்படுத்தும்.

வாகா எல்லைச் சாவடியை பாகிஸ்தான் உடனடியாக மூடும். இந்தப் பாதை வழியாக இந்தியாவிலிருந்து அனைத்து எல்லை தாண்டிய போக்குவரத்தும் விதி விலக்கு இல்லாமல் நிறுத்தப்படும். அரசின் ஒப்புதலுடன் கடந்து சென்றவர்கள் ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் அந்த வழியாக திரும்பலாம். அதன்பிறகு அனுமதிக்கப்பட மாட்டார்கள். சார்க் விசா விலக்கு திட்டத்தின் (SVES) கீழ் இந்திய நாட்டினருக்கு வழங்கப்பட்ட அனைத்து விசாக்களும் ரத்து செய்யப்படுகிறது. சீக்கிய மத யாத்ரீகர்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்படுகிறது. SVES-இன் கீழ் பாகிஸ்தானில் தற்போது உள்ள இந்தியர்கள் 48 மணி நேரத்துக்குள் வெளியேற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு, கடற்படை மற்றும் விமானப் படைகளின் ஆலோசகர்களுக்கான அங்கீகாரம் ரத்து செய்யப்படுகிறது. அவர்கள் ஏப்ரல் 30 இற்குள் பாகிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும். இந்த ஆலோசகர்களுக்கு உதவும் பணியில் உள்ள ஊழியர்களும் இந்தியாவுக்குத் திரும்ப அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஏப்ரல் 30 முதல் இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரக ஊழியர்களின் எண்ணிக்கை 30 ஆக குறைக்கப்படும். இந்தியாவுக்குச் சொந்தமான அல்லது இந்தியாவால் இயக்கப்படும் அனைத்து விமான நிறுவனங்களுக்கும் பாகிஸ்தானின் வான்வெளி உடனடியாக மூடப்படும். இந்தியாவுடனான அனைத்து வர்த்தகமும் நிறுத்தப்படுகிறது.

எந்தவொரு தவறான சாகசத்துக்கு எதிராக செயல்பட, இறையாண்மையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க நாட்டின் ஆயுதப்படைகள் முழுமையாகவும் தயாராக உள்ளன என்று பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புனித பேதுரு பேராலயத்தை அஞ்சலிக்காக இரவு முழுவதும் திறந்து வைக்க தீர்மானம்



பரிசுத்த திருத்தந்தையின் திருவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த அதிகளவான மக்கள் வருவதனால் புனித பேதுரு பேராலயத்தை இரவு முழுவதும் திறந்து வைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் தேகத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக 8 மணி நேரம் மக்கள் வரிசையில் காத்திருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பரிசுத்த திருத்தந்தையின் மறைவையொட்டி வத்திக்கானில் ஒன்பது நாள் துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவரது இறுதி நல்லடக்க ஆராதனை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**

**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

5



லயனல் போபகே



விஜயவீர

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் விஜயவீர தனது அரசியல் தொடக்கத்தில் சண்முகதாசனின் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலே இணைந்திருந்தார்.

அவர் "தனிப்பட்ட பயங்கரவாதத்தை ஒட்டி மார்கஸீய – லெனினிஸ வாதிகளின் கருத்து மிகவும் தெளிவானது. நாங்கள் அவர்களது – அதாவது (தனிப்பட்ட பயங்கரவாதத்தை) ஆதரிப்பதில்லை. ஏனெனில் அவை மக்களில் நம்பிக்கை வைக்காது, முதலாளி வர்க்கத்தின் கனவுத் தன்மையான கோட்பாடுகளிலேயே சிந்திக்கிறார்கள். அவர்களது நம்பிக்கை, வாளும் கத்தியும் துப்பாக்கியும் ஏந்தி விட்டால், அதனூடாக எவ்வளவு எதிர்ப்புகளையும் கடந்து எண்ண முடியாத வெற்றிகளைப் பெறலாம் என்பதில் உண்டு. சில ஆயுதம் தாங்கிய போராளிகள் மக்களாதரவு இன்றி நடத்தும் காரியங்கள் சாதாரண பொது மக்கள் (உழைக்கும் வர்க்கத்தினரின்) ஆதரவின்றி எதிரிக்குப் பலத்த சேதம் விளைவித்து விடும் எனக் கருதுகிறார்கள்." என்றார்.

ஜே.வி.பி. ஸ்தாபகத் தலைவர் விஜயவீர தன்னுடைய கொள்கைகளை உருவாக்கும் போது சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய அடக்கு முறையை கணக்கெடுக்கவும் இல்லை, கவலைப்படவும் இல்லை. தமிழீழம் கேட்பதே முதலாளித் தத்துவார்த்தத்தின் ஒரு சிண்டு, சந்தர்ப்பவாதம் எனக் கருதினார். ஒரு தேசிய இனம் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகின்றதென்றோ அன்றி, சிங்கள அரசுகளின் அடக்குமுறைதான் தமிழ் மக்களின் தமிழீழக் கோரிக்கையை தூண்டியது என்றோ அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

விஜயவீர திரும்பத் திரும்ப, ஆணித்தரமாக, தமிழ் ஈழம் கேட்கப்படுவது சிங்கள அரசாங்கங்களின் அடக்கு முறையின் விளைவுகளால் அல்ல, சந்தர்ப்பவாதமே இவற்றைத் தூண்டுகிறது என்பதை வலியுறுத்தினார். அது மாத்திரமல்ல, இருக்கின்ற பூகோள எல்லைகள் அந்தக் கோரிக்கைக்கு வலுவூட்டுகின்றன, ஜே.வி.பி. கட்சிக்காக விஜயவீர எடுத்த வாதம், தமிழீழம் கோருபவர்கள் பாக்கு

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

நீரிணையின் மறுபக்கம் உள்ள தங்களது சகோதரர்களுடன் இணைந்து, அகன்ற 'திராவிட நாடு' ஒன்றை நிறுவவே விரும்புகிறார்கள். அப்படி அமையக்கூடிய திராவிட நாடு சோழ மன்னர் காலத்தில் சிங்கள அரசுகளுக்கு இருந்த தொல்லைகள் போல் இலங்கையின் இறைமைக்கு என்றுமே சவாலாக இருக்கும்.

அவருடைய ஜே.வி.பியைப் பொறுத்தளவில் தேசிய பிரச்சினைக்கான ஒரே தீர்வு உழைக்கும் மக்களின் பலமான ஆதரவுடன் மார்க்ஸீய தத்துவ வழிகாட்டல் மூலம்தான்.

ஆதலால் உழைக்கும் வர்க்கம், சமஷ்டி அமைப்பை எதிர்க்க வேண்டும், ஏனெனில் அதுதான் நாட்டை பிரிப்பதின் முதல் படி என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.



விஜயவீர ஆணித்தரமாக "மார்க்கஸீயவாதிகள் சமஷ்டி அமைப்பையோ, இணைப்பு வடிவங்களையோ நாடுகளையும் தேசங்களையும் ஒன்றாக இணைப்பதற்காகத்தான் பாவிப்பார்கள். ஒரு காலமும் இப்படியான இடைநிலை அமைப்புகள் ஒரு நாட்டையோ, தேசத்தையோ பிரிப்பதற்கு அனுமதிக்க மாட்டார்கள். ஆகவேதான் ஜே.வி.பி., தமிழீழம் ஒன்றை உருவாக்கி இலங்கையைப் பிரிப்பதை எதிர்க்கிறது. அதைவிட ஆணித்தரமாக சமஷ்டி முறை ஒன்று அமைவதை அனுமதிக்காது. ஏனெனில் தமிழீழம் உருவாவதற்கான வழியின் முதற்படி அதுவாகும்." – என்றார்.

ஆனாலும் விஜயவீர கூட, அநுரா தனது தேர்தல் பரப்புரைகளில் கூறியவாறும் ஜனாதிபதியாகவும் சொல்வது போல. "ஜே.வி.பி. எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து தரும், வேற்று மொழி பேசுகிறார்கள் என்பதனால் ஒருவர் வித்தியாசப்படுத்தப்பட மாட்டார். அதே போல மத ரீதியாகவும் ஒருவர் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட மாட்டார்" என்ற பரப்புரைகளைச் செய்தார்.

இலங்கையின் சரித்திரம் என்பது விஜயவீரவின் பார்வையில், சிங்கள மக்கள் தமது மன்னர்களோடு சேர்ந்து உருவாக்கிய எவ்வளவோ சாதனைகள் – எல்லோருக்குமே குறிக்கோளாக இருக்கக்கூடிய உயர்ந்த பரிமாணம் கொண்ட அருஞ்செயல்கள். அவற்றை சோழர், பாண்டியர் மற்றும் பல தமிழ் படையெடுப்புகள் நிர்மூலமாக்கின. இப்பொழுது வைக்கப்படும் தமிழீழக் கோரிக்கை என்பது அவரது எண்ணத்தில் சோழ சாம்ராச்சியத்தில் ஓர் அங்கமாக இலங்கையின் பல பரப்புகளை உட்கொள்ளும் தன்மை கொண்டது. அவருடைய கணக்கெடுப்பில் விஜயபாகு I என்ற மன்னனே சிங்கள மன்னர்களுக்குள் சாணக்கியன். அவனால் தான் தமிழரின் படையெடுப்புகள் முறியடிக்கப்பட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இதில் விஜயவீர பெருமை அடைந்தார்.

ஆகவே தமிழ் மக்களின் தற்கால அரசியல் அபிலாசைகள் பற்றிய விஜயவீரவின் சரித்திர ஆய்வுகள் அதேபோல் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த எல்லா சிங்களப் பெரும்பான்மை கட்சிகளினதும் அகங்கார ஆணவப் போக்கும் தமிழ் மக்களது உரிமைகள் மறுக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற பிடிவாதமும்தான் தாங்கள் சிங்கள மக்களோடு இணைந்து வாழ்வது சாத்தியமற்றதும், தங்களது அரசியல் அபிலாசைகளை தாங்களே நியமிக்க வேண்டும் என்ற நிலைக்குத் தமிழ் மக்களை தள்ளியது.

சி.ஏ.சந்திரபிரேமாவின் "ஸ்ரீலங்கா – பயங்கரவாத வருடங்கள் – ஜே.வி.பியின் 1987 – 1989 காலங்கள்" (C.A.Chandraperuma 'Sri Lanka - Years of Terror the JVP insurrection in 1987 - 1989)

என்ற புத்தகத்தின் 94 ஆம் பக்கம் முதல் ஜே.வி.பியின் இந்தச் சிந்தனைகளை விவரிக்கின்றது.

1971 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலப் பகுதியில் தமிழர் பிரச்சினையை என்பது அவர்களைப் பொறுத்தவரை இந்தியத் தமிழ் வியாபாரிகளும் அவ்வினப் பாட்டாளி தொழிலாளி வர்க்கமுமே.

ஆகவே அவர்கள் உருவாக்கிய பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவின் விரிவாக்கம் அல்லது அதனது வளர்ச்சிக்கான திட்டங்களால் பார்க்கப்பட்டது.

சுருங்கச் சொன்னால் இந்திய வம்சாவளிகள் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட வெளியேற்றப்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினை அதுவல்ல, மாறானது என்று அவர்கள் (ஜே.வி.பியினர்) ஓர் அபிப்பிராயம் கொள்ள, பல காலங்கள் எடுத்தன. அப்படியும் அவர்கள் தமிழர் பிரச்சனைகளோ, அபிலாசைகளோ இலங்கையின் அரசியல் சவாலாக உருவாகும் வரை அதனை முக்கியமாகக் கணக்கெடுக்க விரும்பவில்லை. ஆனாலும் ஜே.வி.பி. இயக்கத்தில் இருந்து அதன்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

செயலாளர் லயனல் போபகே போன்றவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதில் ஆர்வம் கொண்டு, அவர்களது (தமிழர்களது) அபிலாசைகளை ஒட்டி கொள்கைப் பிரகடனம் வரையப்பட வேண்டும் என அபிப்பிராயப்பட்டார்கள்.

அவர் 1973 இல் புதிய மகஸின் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொழுது, "தேசியப் பிரச்சனையை ஒட்டி ஒரு மார்க்கஸீய ஆராய்வு" என்ற கட்டுரையை எழுதி அதனை மிக விரைவிலேயே இயக்கத்தின் பத்திரிகைகளிலும் இயக்கத்துள்ளும் பதிப்பித்தார். 1977 இல் இனக் கலவரமும் நடந்ததால் இந்த ஆய்வுக் கட்டுரை சிங்கள – தமிழ் இனக் கலவரத்திற்கான ஜே.வி.பி. நிலைப்பாடாகக் கருதப்பட்டது. தமிழரை உள்ளடக்கிய இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பான லயனல் போபகேயின் பார்வை சிறையில் இருந்த காலங்களில் அப்பொழுது தடுப்பு காவலில் இருந்த சந்ததியார், மாவை, புஷ்பராஜா, புஷ்பராணி போன்றோருடன் இருந்த ஊடாட்டத்திலும் அவர்களின் புரிதல்களாலும் ஏற்பட்டது எனக் கூறினால் மிகையாகாது.

ஆனால் ஜே.வி.பி. இயக்கத்தின் முக்கிய தலைவர்களோ, அதிகமான அடிப்படை உறுப்பினர்களோ இந்த ஆய்வுக் கட்டுரை பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. மார்க்கஸீயவாதியான லயனலுக்கோ, தற்காலத்தில் நடைபெறும் இனக் குழுமத்தின் போராட்ட அபிலாசைகள் காலங்கடந்த சாம்ராஜ்ய அல்லது பிரபுத்துவ போராட்டங்களில் இருந்து எவ்வளவோ வித்தியாசமானவை எனப்பட்டது. அவரது மார்க்கஸீய சிந்தனைகளில் சமுதாயமாகவும் இன ரீதியிலும் நடத்தப்படும் நீதியற்ற செய்கைகள் ஈழக் கோரிக்கையை பலப்படுத்துவதை புரிந்து கொண்டு, ஈழக் கோரிக்கையாளர்களிடையே தெரியும் முற்போக்குச் சிந்தனையாளர்களோடு கைகோர்த்துப் பயணிக்க வேண்டும் என அபிப்பிராயப்பட்டார். பிரிவினையை பலவீனப்படுத்த அதுதான் வழி என்று கருதினார்.

லயனலின் பார்வையில் பெரும்பான்மை சிங்கள சமூகம், தமிழ் மக்களை அரச கருமங்கள், படிப்பு, வேலைவாய்ப்புகளில் இருந்து படிப்படியாக ஒதுக்கி வைத்து, பின்னர், அது சிங்கள – பௌத்த நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டபோது அதன் உணர்வுகளைப் புரிந்து கொண்ட தமிழ் மக்கள் வடக்கு கிழக்கின் அதிகாரத்திற்காக ஈழக் கோரிக்கையை முன் வைத்தனர் எனக் கருதினார். இந்தச் சித்தாந்த வாதங்கள் நடைபெற்ற போதும் ஜே.வி.பி. அங்கத்தினர் தங்கள் இயக்கத்தை பலப்படுத்தும் அன்றாட நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருந்தார்கள். இந்த விவாதங்களில் பெரிதளவான ஈடுபாடு காட்டவில்லை. அதுபோலவே ஜே.வி.பி. இயக்கமும் இந்த சித்தாந்தங்களைத் தள்ளி வைத்துவிட்டு 1977 ஆம் ஆண்டு ஒரு கொள்கை பிரகடனம் மேற்கொண்டது. அந்தப் பிரகடனத்தின் கருத்துக்கள் 14, 24, 25, 34, 39, 40, என்பவை தேசியப் பிரச்சினையைக் கோடி காட்டினாலும் தொடரும் பிரிவினை வாதத்தை பற்றி சுருக்கமாக பின்வருமாறு வடித்தது:-

அவற்றைத் தொடர்ந்து நாளை பார்ப்போம்.

**(தொடரும்)**

# கலாசார உத்தியோகத்தர் விசேட தரத்துக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார் நித்தியானந்தன்

**( வாஸ் கூஞ்ஞ)**

யாழ். திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் கலாசார உத்தியோகத்தர் தரம் 1 இல் இருந்து விசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டு சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

2000 ஆண்டு கலாசார உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இ.நித்தியானந்தன் நெடுந்தீவு பிரதேச செயலகம், ஊர்காவற்துறை பிரதேச செயலகம், காரைநகர் பிரதேச செயலகம், வவுனியா




பிரதேச செயலகம், மடு பிரதேச செயலகம் ஆகியவற்றில் கலாசார உத்தியோகத்தராகவும்,

கடந்த 2009 ஆண்டு முதல் மாவட்ட கலாசார உத்தியோகத்தராக வவுனியா மாவட்ட செயலகத்திலும்,

2018 ஆண்டு முதல் மன்னார் மாவட்ட செயலகத்திலும் கடமையாற்றியுள்ளார்.

சுமார் 16 வருடங்கள் மாவட்ட கலாசார உத்தியோகத்தராக பதில் கடமை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைமாமணிப் பட்டதாரியான இவர், யாழ். பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியலில் முதுகலைமாணிப் பட்டத்தையும் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் வழங்கப்படும் இளஞ் சைவப் புலவர், சைவப்புலவர் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வழங்கப்படும் சித்தாந்த பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார். இவர் கடமை புரிந்த இடங்களில் கலாச்சார நிகழ்வுகளை தொகுத்து மேடையேற்றுவதில் சிறந்தவர் என பலராலும் போற்றப்படுபவர்

இவர் மீண்டும் 2025.04.21 ஆம் முதல் மன்னார் மாவட்ட செயலகத்தில் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தராக கடமையை பொறுப்பேற்றுள்ளார்.



# மின்னழுத்தியால் மனைவியின் அந்தரங்க உறுப்பில் சூடு வைத்த கணவன் மே 5 வரை விளக்கமறியலில்!

மின்னழுத்தியால் மனைவியின் அந்தரங்க உறுப்பில் சூடு வைத்து காயப்படுத்தினார் எனக் கூறப்படும் கணவன் ஹத்தரலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டி, ஹத்தரலியத்த பொல்வத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

34 வயதுடைய கணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவியின் தகாத உறவு குறித்து அறிந்துகொண்ட கணவன், மின்னழுத்தியால் மனைவியின் அந்தரங்க உறுப்பில் சூடு வைத்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த 27 வயதுடைய மனைவி பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட கணவன் கலகெதர நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை சிக்கினார்

ஐந்து கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப் பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

21 வயதுடைய இந்தியப் பிரஜையே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இந்தியப் பிரஜை தாய்லாந்தில் இருந்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் அவர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது விமான நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரான இந்திய பிரஜை கொண்டு வந்த பயணப் பொதியில் இருந்து 5 கிலோ 333 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரான இந்தியப் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில்

# பரிசுத்த பாப்பரசருக்கு பொதுமக்கள் அஞ்சலி

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் வைக்கப்பட்டுள்ள மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையின் திருவுருவப் படத்துக்குப் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குருநாகல் – எஹட்டுவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கத்துருவெவ பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் எஹட்டுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார்.

இவர் நேற்று அதிகாலை தனது வீட்டுத் தோட்டத்துக்குள் நுழைந்த காட்டு யானையை விரட்ட முயன்றபோது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# பாப்பரசரின் இறுதிக்கிரிகைகளில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சர் வத்திக்கான் விஜயம்




நித்திய இளைப்பாறுதல் அடைந்த பரிசுத்த பாப்பரசரின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று வெள்ளிக்கிழமை வத்திக்கான் செல்லவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இரங்கல் செய்தியுடன் வத்திக்கான் செல்லவுள்ள அமைச்சர் விஜித ஹேரத் இலங்கை மக்கள் சார்பில் பாப்பரசரின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளார்.

பாப்பரசரின் புகழுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக அரச மரியாதையுடன் வத்திகானிலுள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளை சனிக்கிழமை பாப்பரசரின் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் முன்னெக்கப்படுகின்றன.

பாப்பரசர் தனது 88ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார். இந்நிலையில், பாப்பரசரின் இறுதிச்சடங்கில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பிரிட்டன் இளவரசர் வில்லியம், பிரிட்டன் பிரதமர் கெயிர் ஸ்டார்மர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் உக்ரேனிய ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலர் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேர்தல் குறித்து பொலிஸுக்கு இதுவரை 283 முறைப்பாடுகள்

(எஸ்.ஜினோதன்)

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி 283 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 222 முறைப்பாடுகளும், தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 61 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 25 வேட்பாளர்களும் 98 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 23 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் மறைவு

# மனித நேயமுள்ளவர்களை துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது!

பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் மறைவு உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களை மட்டுமன்றி மனிதநேயமுள்ள அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது என இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் மறைவை அடுத்து சி.வி.கே.சிவஞானம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டலத்தின் அமெரிக்க நாடான ஆஜென்ரீனாவைச் சேர்ந்த பாப்பரசர் பிரான்ஸிஸ்ஸின் மறைவு உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களை மட்டுமன்றி மனிதநேயமுள்ள அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

உலகின் மிகப்பெரிய கிறிஸ்தவ மதக் கட்டமைப்பின் தலைவராக இருந்த பாப்பரசர் பிரான்சிஸ், இன, மத, பூகோள வேறுபாடுகளைக் கடந்து ஒரு பெரிய வலுவற்றவர்களினதும்,



வசதியற்றவர்களதும், தேவைகளைத் தேடி அலையும் ஏதிலிகளதும் குரலாக ஒலித்தவர், அவர்களை நேசித்து அவர்களுக்காகக் குரல் கொடுத்தவர்.

ரஷ்யா – உக்ரைன் யுத்தம் என்றாலும் சரி, இஸ்ரேல் பலஸ்தீன யுத்தம் என்றாலும் சரி சிரிய நாட்டு உள்நாட்டுப் போர் என்றாலும் சரி, போர் நிறுத்தப்பட்டு உலகம் முழுவதிலும் சமாதானம் நிலவ வேண்டும் என்ற மனித இன நேயம் மிக்க மாண்பு கொண்டவராகவும், உலக நாடுகளின் அனைத்துத் தலைவர்களினாலும் மிகவும் மதிக்கப்பட்ட பெரும் மதத் தலைவராக விளங்கினார்.

தமது காலத்தில் உலக அமைதி, ஒற்றுமை, சமாதானம் நிலைத்து நிற்கப்படுவதன் பொருட்டு பல நாடுகளுக்கு விஜயம் செய்து நல்லாசி வழங்கி ஊக்கப்படுத்தியவர்.

அவ்வாறான அவரது உலக நாடுகளின் சுற்றுப்பயணத்தில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவர் எமது நாட்டுக்கு வருகை தந்தமை பெருமைக்குரியது.

அதிலும் எமது வடக்கு மாகாணத்தின் பெருமைக்கு உரிய திருத்தலமான மன்னார் மடுமாதா திருத்தலத்துக்கு 2015.01.14ஆம் திகதி வருகை தந்தமை மதங்கள் கடந்து நாம் செய்த பெரும் பாக்கியமே.

இந்த பெரும் மதத்தலைவரது இழப்பால் துயருறுவோர் அனைவருடனும் இலங்கை தமிழரசுக் கட்சியினராகிய நாமும் இணைந்து துயர் பகிர்ந்து கொள்கின்றோம்.– என்றுள்ளது.



# கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தில் நீரில் மூழ்கிய சிறுவன் உயிரிழப்பு!

**(எம். ஹலால்தீன், ஏ.எச்.ஹஸ்பர்)**

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தில் நீரில் மூழ்கி சிறுவன் உயிரிழந்துள்ளார்.

முகம்மது ரியாஸ் ரம்மி (வயது – 10) எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 5. 15 மணி அளவில் குறிஞ்சாக்கேணி பாலத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நண்பர்கள் மூவருடன் மட்டி எடுக்கச் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீரில் மூழ்கை உயிரிழந்தவர் கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் ஐந்–தில் கல்வி கற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் சடலம் கிண்ணியா தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுமுகமாக ஆரம்பமாகி இடம்பெறும் நுவரெலியா தபால் வாக்குப் பதிவுகள்

## தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான துஷாரி தென்னகோன் தெரிவிப்பு

(மஸ்கெலியா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் வாக்குகளை நுவரெலியாவில் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நுவரெலியா மாவட்டத்தில் அஞ்சல் வாக்குப் பதிவுகள் நேற்று (24) காலை ஆரம்பமாகி இடம்பெற்றன என்று நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான துஷாரி தென்னகோன் தெரிவித்தார்.



இன்று (25) மற்றும் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய தினங்களிலும் தபால் வாக்குகளை பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, அரச நிறுவனங்கள், பொலிஸ், ஆயுதப் படைகள், பள்ளிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களில் இருந்தும் அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரர்கள் இந்த நாள்களில் தங்கள் அஞ்சல் வாக்குகளை பதிவு செய்ய வாய்ப்பு கிடைக்கும்.

நுவரெலியா மாவட்டத்தில் அஞ்சல் வாக்குகளை பதிவு செய்ய 18,232 அதிகாரிகள் தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி துஷாரி தென்னகோன் தெரிவித்தார்.

# நெவில் சில்வாவுக்குப் பிணை



கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வாவை இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மாத்தறை – வெலிகம பிரதேசத்தில் உள்ள ஹோட்டலுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் நெவில் சில்வா நேற்று நீதிமன்றில் சரணடைந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை – வெலிகம துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நெவில் சில்வா உள்ளிட்ட 9 பேரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொடிகாமம் இராணுவ புலனாய்வுப் பிரிவால் 10 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா மீட்பு!



(த.சுபேசன்)

கொடிகாமம் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று (24) வியாழக்கிழமை காலை கிளாலிப் பகுதியில் உள்ள பற்றைக் காணி ஒன்றினுள் இருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளாலிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு அருகாமையில் உள்ள காணி ஒன்றில் இருந்தே இந்த இரண்டு கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இராணுவத்தினர் அதனைப் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்கள் தப்பித்துள்ள நிலையில் அது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# சட்டத்தை புறமொதுக்கி வன்முறைகளில் ஈடுபடும் போக்கு அதிகரித்து வருகிறது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

இன்று, நமது நாடு பல சவால்களையும் இடர்களை எதிர்கொண்டு வருகிறது. பொருளாதார, சமூக, சட்டம் மற்றும் ஒழுங்குகளில் பல சவால்கள் எழுந்துள்ளன. நாட்டில் காட்டுமிராண்டித்தனம் தலைதூக்கியுள்ளது. சட்டத்தை புறமொதுக்கி வன்முறைகளில் ஈடுபடும் போக்கு அதிகரித்து வருகிறது. இவற்றுக்கு மத்தியில் மக்கள் அச்சத்தோடு மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மதுகம நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிறுவர்கள், பெண்கள், தாய்மார்கள், இளைஞர்கள் என ஒட்டுமொத்த பிரஜைகளும் தோட்டாக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். கைத்துப்பாக்கிகள் தலைதூக்கும் இந்தக் காலகட்டத்தில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரிடம் இதற்குப் பதில்களும் தீர்வுகளும் இல்லை.

சமூகத்தில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ள இந்த வேளையில், தீர்வை வழங்காமல் ஜே.வி.பி. அதிகாரத்தை கைப்பற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரம் நிதி வழங்குவோம் என ஜனாதிபதி கூறிவருகிறார்.

ஜனாதிபதி நிதி வழங்கினாலும், வழங்காவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வெற்றியை பெற்று, சமூக பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு குழுக்களை மீண்டும் நிறுவி உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவோம். மக்களை மையமாகக் கொண்ட சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குவோம்.

தேர்தல் மேடையில் சொன்னது எதுவும் நிறைவேற்றப்படவில்லை. நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத இந்த அரசு தற்போது புதிய பொய் பட்டியலை கூறி, வரவு – செலவுத் திட்டத்தில் இல்லாத சலுகைகளை வழங்குவதாகவும் கூறி வருகின்றது.– என்றார்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தில் தமிழரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டம்

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகார சபையின்கீழ் உள்ள, கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் மிக்கேற்பிள்ளை ஜோன்சன் மோகனராஜாவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நேற்று முன் தினம் (23) இடம்பெற்றன.

இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தின் கீழ் காணப்படும் செம்மலை கிழக்கு (நாயாறு), செம்மலை, அளம்பில், உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களில் இவ்வாறு தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டிய அவசியம் தொடர்பில் பேசப்பட்டது. தமிழரசுக் கட்சியை அமோக வெற்றியடையச் செய்ய வேண்டும் எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இதன் போது கிராமங்களிலுள்ள குறைபாடுகள், பிரச்சினைகள் தொடர்பில் மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மக்களால் தெரியப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் இதன் போது தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# தமிழ்க் கட்சிகளுடன் மட்டுமே இணைந்து ஆட்சி அமைப்போம்!

### காரைதீவில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி செயலாளர் குருபரன் தெரிவிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் இருக்கும் தற்போதைய அரசமைப்பை மாற்றாவிட்டால் தமிழருக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்கப் போவதில்லை. ஒற்றையாட்சி மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாகலிங்கம் குருபரன் காரைதீவில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் காரைதீவு பொது நூலக கேட்போர் மண்டபத்தில் நேற்று முன்தினம் (23) புதன்கிழமை நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹென்றி மகேந்திரன் மற்றும் இணைப்பாளர் சி.புண்ணியநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு குருபரன் மேலும் பேசுகையில்,

வடக்கு, கிழக்கில் எந்த சபையில் என்றாலும் ஆட்சி அமைக்கும் போது நாங்கள் தமிழ் கட்சிகளுடன் மாத்திரமே இணைந்து ஆட்சி அமைப்போம். வேறு சிங்கள, முஸ்லிம் பேரினவாதக் கட்சியுடன் சேர்ந்து ஒருபோதும் ஆட்சி அமைக்க உடன்பட மாட்டோம்.

தென்னிலங்கை மக்கள் எதிர்பார்த்த மாற்றம் அங்கு நடந்தது. ஆனால் வடக்குக் கிழக்கு மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இன்னும் நடைபெறவில்லை. அதுதான் அரசமைப்பு மாற்றம். எனவே தேசிய மக்கள் சக்தி விரைவாக அந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உங்களை நம்பி வடக்குக் கிழக்கு மக்கள் கடந்த இரண்டு தேர்தல்களில் வாக்களித்து இருக்கின்றார்கள்.

ஒரு வழியில் எமது தமிழின தலைவர்கள் மீது அல்லது அவர்களின் செயற்பாட்டின் மீது கொண்ட வெறுப்பும் ஆத்திரமும் ஒரு காரணமாக இருக்கலாம்.

எனவே தமிழ் தேசிய பரப்பில் இருக்கக் கூடிய தமிழ் தலைவர்கள் ஒற்றுமை எனும் வலுவான கயிற்றை இறுக பற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இன்னமும் நிலைமை மோசமாகும் .

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து பல மாதங்களாகின்றன. ஆனால் தமிழினத்தைப் பொறுத்தவரையில் அங்கு எந்த விதமான ஆரோக்கியமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை கூறித்தான் ஆக வேண்டும்.

அண்மையில் டில்வின் சில்வா கூறினார், 'நாங்கள் ஆயுதத்தை விரும்பி தூக்கவில்லை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்' என்று .

இதே நிலைமைதான் தமிழ் மக்களுக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் ஏற்பட்டது.

எனவே அவற்றை மறந்து புதிய சமுதாயத்தை கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் அனைவரையும் இணைத்து செல்ல வேண்டியது அரசின் கடமையாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக் கூடிய கட்சிகளில் ஜனநாயகம் அதிகாரப் பகிர்வு கருத்துக்களை ஏற்கும் தன்மை கூடுதலாக இருப்பது எமது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பிலே உள்ளது. அதன் காரணமாக நீங்கள் தாராளமாக வாக்களிக்கலாம்.

துரதிர்ஷ்டவசமாக திருக்கோவில் பிரதேச சபையில் எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது கவலைதான். அதனை நாங்கள் பொறுப்பேற்கின்றோம்.

இருந்த பொழுதிலும் ஏனைய பிரதேசங்களில் நாங்கள் கணிசமான அளவு வெற்றிபெற இருக்கின்றோம். எதிர்காலத்தில் நாங்கள் ஒற்றுமையை வலியுறுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பை மீண்டும் வலுவான கட்சியாக உருவாக்க வேண்டும்.-என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலத்தில் மலையக மக்களின் காணி உரிமை உறுதியாகும்

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிப்பு

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மலையக மக்களுடைய காணி உரிமை உறுதிசெய்யப்படும் என்று பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி புரியில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர்,

மக்களால் புறக்கணிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் எம்மை மக்கள் மத்தியில் சென்று விமர்சனம் செய்து வருகிறார்கள். அமைச்சர் ஒன்றையும் பிரதி அமைச்சர் ஒன்றையும் கூறுவதாக விமர்சனம் செய்து வருகிறார்கள்.

கடந்த காலங்களில் இனவாதத்தை மூலதனமாக முன்வைத்து அரசியல் செய்து வந்தார்கள். தற்போது நாட்டில் உள்ள அனைத்து மக்களும் ஒன்றிணைந்து வாழக் கூடிய நாடாக தேசிய மக்கள் சக்தி மாற்றியிருக்கிறது. மலையக மக்கள் தென் இந்தியாவில் இருந்து மலையகத்துக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ளன.

கடந்த 76 வருடங்கலாக எமது மக்களுடைய வாக்குகளைப் பெற்றவர்கள்



மக்களுடைய வாக்குகளை மாத்திரம் பார்த்தார்களே தவிர அவர்களுடைய வாழ்க்கையை பார்க்கவில்லை. தேர்தல் காலப் பகுதியில் இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கியவர்கள் பதவிக்கு வந்த பிறகு மக்களின் அபிவிருத்தியை மறந்தார்கள்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி இந்த வரவு, செலவுத் திட்டத்தில் அனைத்து மக்களுக்கும் சமனான நிதி ஒதுக்கீடு செய்து இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் சமனான அந்தஸ்த்தை வழங்கியிருக்கிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் ஒரு போதும் இருந்தது கிடையாது. ஆனால் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இரத்தினபுரி மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு பிரதிநிதியை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி உள்ளார்கள்.

இந்திய அரசு மலையக மக்களுக்கு வழங்கிய 5400 வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அது மட்டுமின்றி கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்குப் பாரிய நிதி ஒதுக்கீடைச் செய்துள்ளோம்.

கடந்த காலங்களில் எமது மக்களை தோட்ட மக்கள் என அழைத்தார்கள். சமூகத்தில் எமது மக்களுக்கான அந்தஸ்து வழங்கப்படவில்லை. எமது தலைவர் அநுரகுமார திஷாநாயக்க நாடாளுமன்றத்தில் எமது மக்களுக்கான அங்கிகாரத்தை வழங்கினார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் வேட்பாளர்கள் 40 பேர் களமிறக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய வெற்றி இன்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. திருடர்கள் இன்று அஞ்சுகிறார்கள். எமது அரசாங்கத்தை விமர்சனம் செய்பவர்கள் சற்று பொறுத்திருங்கள். கடந்த காலங்களில் செய்த ஊழல்களுக்குத் தண்டனை காத்திருக்கிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு பாடசாலையில்லை. எமது மாவட்டத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட பாடசாலை ஒன்றை நிர்ணயிப்பதற்கு எமது அரசின் ஊடாக 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடு செய்துள்ளோம். - எனக் குறிப்பிட்டார்.



# இன்றைய ராசி பலன்கள் - 25.04.2025




இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள நீங்கள் மிகவும் முயற்சி எடுப்பீர்கள். உங்கள் மனது அமைதியாக இருக்கும். உங்கள் இலக்கில் கவனம் செலுத்த இயலும்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். உங்கள் பொறுப்புகளை முறையாக ஆற்றுவீர்கள்.

நல்ல சுமுகமான உறவுமுறை காணப்படும். உறவுப் பிணைப்பின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

குடும்பத்தில் விசேஷங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் அமைதியான மனநிலை காரணமாக மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




ஒரு சாதகமான நாள் உங்கள் முன் இருக்கின்றது. இன்று அமைதியான மனநிலையுடன் காணப்படுவதால் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இன்று மாற்றங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு நன்மையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கும். உங்கள் பணியின் தரம் குறைவாக இருக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத்தாருடன் இனிமையாகப் பேசி பழகுவீர்கள்.

பணம் அதிகமாக காணப்படும். பயனுள்ள நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.




இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று சில பொறுப்புகளை உங்களால் செய்ய முடியாமல் போகலாம்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். எனவே நல்லுறவை தக்க வைக்க கவனமாக இருக்க வேண்டும்.

பணஇழப்புக்கு வாய்ப்பிருப்பதால் பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். தொண்டை வலி அல்லது கண்களில் எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பணிகளில் தாமதம் ஏற்படும். பணிகள் சுமுகமாக நடைபெற நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

குடும்ப வட்டாரத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தைத் தரும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கும் உகந்த நாள். ஸ்திரமான நாளாக அமையும்.

இன்றைய நாள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று அர்ப்பணிப்புடன் செயல்படு வீர்கள் உங்கள் நலன் பெருகும். இன்று பயணங்கள் காணப்படும்.

இன்று பணிச்சூழல் நன்றாக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

இன்றைய தினம் காதலுக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் மகிழ்ச்சியைத் தேடுவீர்கள்.

இன்று பண இழப்புக்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சளி இருமல் போன்ற உபாதைகளுக்கு ஆளாக நேரலாம்.




இன்று உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இன்று அதிர்ஷ்டங்களை சந்திப்பீர்கள்.

பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் சிறந்த பணி காரணமாக பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது.

பெரியவர்களிடமிருந்து இன்று அறிவுரை ஒன்றை கேட்க நேரும். நல்லுறவுக்கு அது பயனளிக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உங்கள் சகபணியாளர்கள் மற்றும் கீழ்ப் பணி புரிபவர்களின் ஆதரவு உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் மற்றும் நற்பெயர் கிடைக்கும்.

குடும்ப அங்கத்தினர்களிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணத்தை கையாள்வதில் கவனம் தேவை. அலட்சியமாக இருந்தால் பணஇழப்பு ஏற்படும்.

ஆரோக்கியம் குறைந்து காணப்படும். உங்கள் உணவில் கவனம் செலுத்துங்கள். குளிர்ச்சியான உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள்.




இன்றையநாள் சமநிலையுடன் காணப்படும். உங்கள் அணுகுமுறை மூலம் நீங்கள் புதிய தொடர்புகளை பெறுவீர்கள்.

இன்றை பணியின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். இது உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டும்.

உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். நண்பர்கள் உங்களுக்கு நல்லாதரவு தருவார்கள்.

இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும். உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் போன்ற விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பா க இருக்கும். நீங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.04.2025




இன்றைய நாளில் எதிர்பாராத மாற்றங்கள நிகழும். முயற்சிகளை சார்ந்து செயல்படுவது நல்லது.

பணியிடத்தில் நற்பெயரைப் பெறுவீர்கள். விரும்பி பணியாற்றுவீர்கள்.

குடும்பத்தாருடன் நல்லுறவு பராமரிப்பதற்கு உகந்த நாள். காதல் ஜோடிகள் இன்று பரஸ்பர ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். பூர்வீகச் சொத்து, காப்பீடு அல்லது லாட்டரி மூலம் பணம் கிடைக்கலாம்.

இன்றைய நாள் நல்ல ஆரோக்கியத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரே விஷயம் நீங்கள் உண்ணும் உணவு முறைகள்.




திறமையான முறையில் செயலாற்ற உங்களுக்கு பொறுமையும் உறுதியும் தேவை.

பணி செய்வதற்கான திறமை உங்களிடம் காணப்படும் போதிலும் சிறந்த திட்டமிடல் இல்லாத காரணத்தால் அதனை நீங்கள் வெளிப்படுத்த இயலாது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

குடும்பத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.குடும்பத்தின் அமைதி சூழலை கெடுக்கும் வகையில் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்துக்காகப் பணத்தைச் செலவு செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உடல் நலத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று அன்பும் ஆர்வமும் நிறைந்திருக்கும். நல்ல பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். விளையாட்டில் நேரத்தை கழியுங்கள்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. அனுசரித்து நடந்து கொண்டால் உங்கள் பணிகள் பாதிக்காது.

காதலுக்கு உகந்த நாள்.காதல் ஜோடிகள் உறவில் ஒற்றுமை கண்டு மகிழ்வார்கள்.

நிதி விஷயங்களில் வளர்ச்சி காணப்படும்.பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். சுய வளர்ச்சிக்காக தொடர்ந்து முயன்றால் இன்று வெற்றிகரமான நாளாக ஆக்கலாம்.

பணியில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்கள் காணப்படும். மேலதிகாரிகள் மற்றும் சகபணியாளர்களுடன் உறவாடும் பொழுது கவனமுடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னேற்றமும் வளர்ச்சியும் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறந்தோரின் ஆதரவு கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள். இன்று நிதி சம்பந்தமாக முக்கியமான முடிவுகளை எடுப்பது பயனுள்ளதாக இருக்கும். இன்று சிறந்த ஆரோக்கியத்தின் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# பூஸா சிறையில் விசேட சோதனை! பல்வேறு பொருள்கள் கைப்பற்றல்!!



பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பல்வேறு பொருள்கள்

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சோதனை நடவடிக்கையில், கையடக்கத் தொலைபேசி, 2 சார்ஜர்கள், சிம் அட்டைகள் மற்றும் டேட்டா கேபிள்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.